வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
ந. க. எண். 1019 /அ2 /2022 நாள். 26.05.2022.

பொருள் : குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009– ன்படி 2022–2023 ஆம் கல்வி ஆண்டில் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தொடர்பாக – (30.05.2022) அன்று நடைபெறும் குலுக்கலில் கண்காணிப்பு பணி மேற்கொள்ள நியமனம் செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை: குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மைத் தொடர்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1476/இ1/2022, நாள்.06.04.2022.

-----

பார்வையில் காணும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மைத் தொடர்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகளின் படி 2022–2023 ஆம் கல்வி ஆண்டில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு 25 % இட ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை மேற்கொள்வதற்கான பணிகள் மேற்கொள்ள மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்கள் நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் மற்றும் மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளில் 2022 –2023 ஆம் கல்வியாண்டிற்குரிய இலவசக் கட்டாயக் கல்வி திட்டத்தின் கீழ் எல்.கே.ஜி நுழைவு நிலை வகுப்பிற்கு விண்ணப்பித்த விண்ணப்பங்களில் 25 %; க்கு மேல் விண்ணப்பித்த பள்ளிகளுக்கு 30.05.2022 அன்று குலுக்கலில் குழந்தைகளை தேர்ந்தெடுக்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டு கண்காணிப்பு பணி அலுவலர்களாக நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

எனவே இணைப்பில் காணும் பள்ளி தலைமைஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்கள் 30.05.2022 அன்று நடைபெறும் இலவசக் கட்டாயக் கல்வி திட்டத்தின் கீழ் குலுக்கலில் சார்ந்த பள்ளி முதல்வர்கள் மற்றும் வருவாய்த்துறை சார்ந்த பணியாளர்களுடன் சேர்ந்து இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் செவ்வனே பணிகளை மேற்கொள்ளுமாறு மீளவும் தெரிவிக்கப்படுகிறது, மேலும் சாரந்த பள்ளியில் குலுக்கலின் போது அசாதாரண

சூழ்நிலை ஏற்பட்டால் தன்னிச்சையாக செயல்படாமல் உடனடியாக கீழ்க்காணும் முதன்மைக் கல்வி அலுவலர் அல்லது மாவட்டக் கல்வி அலுவலரின் கைப்பேசியே தொடர்பு கொள்ளுமாறு திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| முதன்மைக் கல்வி அலுவலர் கைப்பேசி எண் | 9385202007 |
| மாவட்டக் கல்வி அலுவலர் கைப்பேசி எண் | 9894218193 |
| மாவ எழுத்தர் | 7868015820. |

இவ்வாணையினை இரத்து செய்யவோ மாற்றம் செய்யவோ இயலாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. நியமனம் செய்யப்பட்ட தலைமை ஆசிரியர்கள் / முதுகலை ஆசிரியர் பெயர் பட்டியல்
2. பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்

சார்ந்த முதுகலை ஆசிரியர்களுக்கு ( தலைமை ஆசிரியர் மூலமாக )

வேலூர் மாவட்டம்.